Registered as a Newspaper

All kinds of VELONA Products
(WHOLESALE)
Banians Ladies Vestes
Panties Baby Suits
T-Shirts Socks
Etc., Etc.
'ARTHE Group'
Contact:
ARTHE JEWELLERS
(Pvt) LTD,
111. Kasturiar Road,
JAFFNA.
T'Phene: 23628

உதயன்

விலை ரூ. 1/-

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

தரமான VELONA
தயாரிப்புகளை
யாழ்நகரில்
மொத்தமாகப்
பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்
"ARTHE GROUP"
தொடர்பு கொள்க:
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
(Pvt) லிமிட்டெட்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23628

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஞுல ஐப்பசி மீ 12 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1406 ஸபர் பிறை 24 (29-10-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 293

மட்டக்களப்பில்

புலிகள் நிலக்கண்ணி: 4 கொமாண்டோ பலி

மாட்டு வண்டிலில் வைத்து நடத்தப்பட்ட தாக்குதல்

மட்டக்களப்பு, அக். 29

மட்டக்களப்பு நகரில் நேற்றுக் காலை தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய நிலக்கண்ணி வெடித் தாக்குதலில் நான்கு பொலீஸ் கொமாண்டோக்கள் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர்.

ஐந்துக்கு மேற்பட்ட கொமாண்டோக்கள் படுகாயமடைந்தனர்.

கொமாண்டோக்கள் வந்த பொலீஸ் கவச வாகனம் சுக்கு நூறாகியது.

மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்தில் இருந்து நேற்றுக்காலை 7 மணியளவில் புறப்பட்ட பொலீஸ் கமாண்டோக்களின் வாகனமே இத் தாக்குதலில் சிக்கியது.

பொலீஸ் நிலையத்தில் இருந்து சுமார் 300 யார் தொலைவில் அரசடிச் சந்திக்கும் வில்லுச் சந்திக்கும் இடையில் உள்ள 'இப்றாஹீம் மோட்டோர்ஸ்'' ஸ்தாபனத்தின் முன்னால் மாட்டு வண்டில் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த கண்ணி வெடித் தாக்குதலில் இந்த ஜீப் கவச வாகனம் அகப்பட்டது.

அறிக்கை

இச் சம்பவம் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறது:-

செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்தில் இருந்து வாகனத் தொடரொன்றில் பல கொமாண்டோக்கள் கல்லடி நோக்கி ரோந்து சென்று கொண்டிருந்தனர்.

அவ்வேளை பொலீஸ் நிலையத்தில் இருந்து சுமார் 300 யார் தொலைவில் உள்ள அரசடி சந்தி வழியாக ரோந்துப்படை

(4ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீலங்கா தபால்தலை ஒட்டிய கடிதங்கள் எரிக்கப்பட்டன

யாழ்ப்பாணம், அக். 29

ஸ்ரீலங்கா தபால் தலைகள் ஒட்டி வந்த தபால்கள் யாழ் பெரிய தபாற் கந்தோருக்கு முன் போட்டு எரிக்கப்பட்டன.

இது தொடர்பாக ஈ. பி. ஆர். எல். எவ். நேற்று விடுத்த அறிக்கை வருமாறு:-

குடாநாட்டு தபால் சேவைப் பரிவர்த்தனையில் ஈழம் தபால் தலைகளின் எண்ணிக்கை பெருகியுள்ளது.

இது ஈழம் தபால் சேவைக்கு கிடைத்த பெருவெற்றியாகும்.

இந்த வெற்றிக்கு பொதுமக்கள், நிறுவ

(4-ம் பக்கம் பார்க்க)

ஜி. சி. ஈ.

உயர்தரப் பரீட்சை முடிவு நாளை

கொழும்பு, அக். 29

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள கல்விப் பணிப்பாளர்களின் கைகளில் கடந்த திங்கட்கிழமையே ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள் கொழும்பில் வைத்துக் கையளிக்கப்பட்டன.

கொழும்பில் இப்பரீட்சை முடிவுகள் நாளை 30 ஆம் திகதி வெளியிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை—

ஜி. சி. ஈ. உயர்தர பரீட்சை முடிவுகளை எடுத்துக் கொண்டு வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு.ஆர். சுந்தரலிங்கம் இன்று யாழ்ப்பாணம் வந்து சேர்வார்.

உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை அதிபர்கள் நாளை (வியாழக்கிழமை) காலை கல்விப் பகுதிக்குச்

(4ம் பக்கம் பார்க்க)

விஜே மீது அனுரா குற்றச்சாட்டு

கொழும்பு, அக். 29

புலிகளினால் சிறைப் பிடிக்கப்பட்ட 'சிப்பாய்களின் நிலையை விஜே குமாரணதுங்க யாழ் சென்று மோசமாக்கி விட்டார்.

இப்படி எதிர்க் கட்சித் தலைவர் அனுரா பண்டார நாயக்கா நுவரெயாவில் நடந்த கூட்டத்

(4 ஆம் பட்கம் பார்க்க)

டிக்ஸிற் நவ. 4 இல் திரும்புகிறார்

சென்னை, அக். 28

இந்திய தூதர் திரு. டிக்ஸிற் அடுத்த மாதம் 4 ஆம் திகதி கொழும்பு திரும்புகிறார்.

தற்சமயம் புதுடில்லியில் நிற்கும் திரு. டிக்ஸிற் நவம்பர் 2 ஆம் திகதி சென்னை வருகிறார். 3 ஆம் திகதி நடைபெறும் முதலமைச்சர்—போராளிகள் சந்திப்பின் பெறுபேறுகள் பற்றி அறிந்து கொண்டு 4ஆம் திகதி கொழும்பு திரும்புகிறார். திரு. டிக்ஸிற் (அ-எ)

சுபநேரம்

29-10-1986
புதன்கிழமை
சுபநேரம்:
4.33 முதல் 6 03 வரை
ராகுகாலம்:
12.03 முதல்1.33 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
ஏகாதசி விரதம்

முச்சந்தி முனி



ஆர் நம்பிக்கை தெரிவிச்சாப் போலை என்ன, தீர்வும் தான் வாற நேரத்திலை, வர வேண்டிய வழியாலை வந்து சேரும் அவ்வளவு தான்!

9 பேர் தெரிவு

யாழ்ப்பாணம், அக். 29

செவனநிதி வீடு கட்டும் திட்டத்தின் கீழ் ஏழ்மை நிலையில் உள்ள ஒன்பது பேர்கள் சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தெரிவு செய்யப்பட்டு உள்ளனர்.

முதல் கட்டமாக தலா 3,000 ரூபா வீதம் ஒன்பது பேர்களுக்கும் வழங்கப்பட்டது.

சங்கானை உதவி அரச அதிபர் திரு. து. வைத்திலிங்கம் காசோலைகளை வழங்கினார். (இ-எ)

★ இனப்பிரச்சினை

இந்திய அரசு புதுத்திட்டம் தயாரிக்கிறது

மூன்றாம் திகதிக்கு முன்னர் போராளிகளிடம் கையளிப்பு

சென்னை- அக்டோபர் 28

இலங்கை இனப்பிரச்சினைக்கு இந்திய அரசியல் நிபுணர்கள் புதிய திட்டம் ஒன்றைத் தயாரித்துக் கொண்டிருக்கின்றனர்.

இலங்கை அரசின் யோசனைகளையும் தமிழர் விடுதலைக் கூட்டணி இந்திய அரசுக்குச் சமர்ப்பித்த கருத்துக்களையும் அடிப்படையாக வைத்தே இந்திய நிபுணர்கள் புதிய சமரசத் திட்டத்தைத் தயாரித்து வருவதாக சென்னை வட்டாரஙகள் தெரிவிதன.

இந்தியத் திட்டம் தமிழ்ப் போராளிக்குழுக்களிடம் ஒரிரு தினங்களில் கையளிக்கப்படும் என்று தமிழ்நாடு உணவுஅமைச்சர் திரு. பாண்ருட்டி இராமச்சந்திரன் தெரிவித்தார்.

இந்திய அரசின் திட்டத்தை அடிப்படையாக வைத்தே போராளிகள் நவம்பர் 3ஆம்திகதி முதலமைச்சருடன் பேசுவர் என்றும் பண்ருட்டி இராமச்சந்திரன் சொன்னார்.

இலங்கை அரசு, தமிழ்ப்போராளிகளுடன் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் நடந்து கொள்ளமேண்டும்.

ஆக்கபூர்வமான முறையில் இலங்கை அரசு தமிழர் பிரச்சினையை அணுக வேண்டும்,

இலங்கைத் தமிழருக்கு மன நிறைவை ஏற்படுத்தக் கூடிய விதத்தில் தீர்வு காணப்பட வேண்டும்.—

இப்படி திரு. இராமச்சந்திரன் சொன்னார்.(எ

சிப்பாய்கள் சடலத்துக்கு பொலீஸ் காவல் ஏன்?

குமாரணதுங்க விளக்குகிறார்

கொழும்பு, அக்.29

தென் இலங்கைக்கு அனுப்பப்படும் சிப்பாய்களின் சடலங்கள் அடக்கம் செய்யப்படும் வரை பொலீஸ்காவல் போடப்படுகிறது:

அரசின் உத்தரவின் பேரிலேயே இப்பொலீஸ் காவல் போடப்படுகின்றது.

ஏன் இந்தப் பொலீஸ் காவல்? என்பதுபற்றி ஸ்ரீ லங்கா மக்கள் கட்சியின் பொதுச் செயலாளர் விஜய குமாரணதுங்கா செய்தியாளரிடம் விளக்கினார்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் போராளிகளின் தாக்குதலில் சிப்பாய்கள் உயிரிழக்கின்றனர்.

அவர்களின் சடலங்கள் பொலி

(4 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கைக்கு படை அனுப்பும் தீர்மானம் கொண்டுவராதது ஏன்?

சுப்பிரமணிய சுவாமி கேள்வி

சென்னை, அக். 28

இனப்பிரச்சினைப் பேச்சுக்கள் வெற்றி அளிக்காத நிலையில் சட்டப் பேரவையில் இலங்கைக்கு இராணுவத்தை அனுப்பும்படி மத்திய அரசைக் கோரும் தீர்மானத்தை தமிழக அரசு ஏன் நிறைவேற்றவில்லை?

இப்படி ஜனதா தலைவர்களில் ஒருவரான டாக்டர் சுப்பிரமணிய சுவாமி கேட்டிருக்கிறார்.

(4. ஆம் பக்கம் பார்க்க)

அமெரிக்கா பொருளாதார தடை

வாஷிங்டன், அக். 28

தென் ஆபிரிக்கா மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளது.

இதனை அமுல் நடத்தும் பொறுப்பு ராஜாங்க அமைச்சர் ஜோர்ஜ் சூல்ட்ஸ் இடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதற்கான உத்தரவில் அமெரிக்க அதிபர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

ஆயரை அவமதித்த அரச படையினர்

மட்டக்களப்பு, அக். 29

மட்டக்களப்பு-திருகோணமலை ஆயர் வண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை நேற்றுப்பகல் அதிரடிப் பொலீஸ் படையினரால் அவமதிக்கப்பட்டார்,

ஆயரே இது சம்பந்தமாக மட்டக்களப்பு இராணுவ இணைப்பு அதிகாரியிடம் நேற்று முறையிட்டார்.

வண. பிதா ஜெரோம் டிஸாவின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு காரில் திரும்புகையில் ஆஸ்பத்திரிக்கு அருகில் கமாண்டோக்கள் மறித்தனர்.

காரினுள் இருந்த ஆயரை நோக்கித் துவக்கை நீட்டி கமாண்டோக்கள் அவமரியாதையாக நடத்தினராம்.

ஆயரின் முறைப்பாட்டைக் கேட்ட இராணுவ இணைப்பதிகாரி, இது பற்றி நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார். (அ-எ-21)

இவரும் கலந்து கொள்வார்

சென்னை, அக். 28

சென்னையில் நவம்பர் 3 இல் நடைபெறும் முதலமைச்சர் தமிழ்ப் போராளிகள் சந்திப்பின் போது இந்திய அரசியல் நிபுணரான திரு. எஸ். பாலகிருஷ்ணன் கலந்து கொள்வார்.

தமிழ்நாடு அரசின் அழைப்பின் பேரிலேயே அவர் கலந்து கொள்வார் என்று தெரிகிறது. (இ-ஐ-எ)

தீர்வில் ராஜீவ் நம்பிக்கை

புதுடில்லி, அக். 28

இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமான யோசனைகளைப் பார்க்கும்போது தீர்வு ஒன்று ஏற்படலாம் என்ற நம்பிக்கை தோன்றுகிறது.

இப்படி பிரதமர் ராஜீவ் காந்தி, புதுடில்லியில் நடைபெற்ற முப்படைகளின் அதிகாரிகள் அடங்கிய மாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகிய முப்படை அதிகாரிகள் மாநாடு ஒன்று இந்தியாவில் நடந்தது இதுவே முதல் தடவை என்று அறிவிக்கப்படுகின்றது.

இந்துமாகடலில் வெளிநாட்டுக் கப்பல்களின் நடமாட்டம் இந்தியாவுக்கு கவலை தருவதாக உள்ளது என்றும் பிரதமர் ராஜீவ்காந்தி சொன்னார். (இ-எ)

போராளிகள் ஒத்துழைப்பின்றி கூட்டணி செயற்பட முடியாது

இந்திய அரசு கருத்து

புதுடில்லி, அக். 28

தமிழ்ப் போராளிகளின் ஒத்துழைப்பின்றி நிர்வாகத்தை தமிழர் விடுதலைக் கூட்டணி பொறுப்பேற்கலாம் என்ற கருத்தை இந்திய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை.

இப்படி பிரபல அரசியல் விமர்சகர் ஜி. கே. ரெட்டி புதுடில்லி அரசு வட்டாரங்களை ஆதாரங்காட்டி 'இந்து' பத்திரிகையில் எழுதியிருக்கின்றார்.

பெங்களூரில் இலங்கை ஜனாதிபதியைச் சந்திக்கும் முன்னர் தமிழ்ப் போராளிக்குழுக்களின் மனநிலையை அறிந்து கொள்ளபிரதமர் ராஜீவ் காந்தி விரும்புன்கின்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிலை இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டு விட்டது.

போராளிகளின் நிலையை நவம்பவர் 3 க்கு பின்னர் இந்தியப் பிரதமர் அறிந்து கொள்வார்.

இதனிடையில் அடையாளங்காட்டிக்கொள்ள விரும்பாத போராளிக் குழு ஒன்று தமிழ்மொழி மாநிலக் கோரிக்கையை கொண்டிராத தீர்வுக்குத் தாங்கள் ஒத்து வராதபோதும், தமிழர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

பரந்தனில்
தீபாவளிப் பண்டிகையை
முன்னிட்டு
பலதரப்பட்ட நவநாகரிக
ஜவுளி வகைகளை
உங்கள் விருப்பத்துக்கு ஏற்ற வகையில்
தெரிவு செய்வதற்கு சிறந்த
ஸ்தாபனம்
சாயி கீத்தா
ரெக்ஸ்ரைல்ஸ்
முல்லைத்தீவு வீதி,
பரந்தன்.

பதவி வெற்றிடம்

போக்குவரத்துக் காவலர்
(TRAFFIC POLICE)

யாழ் மாவட்டத்தில் போக்குவரத்து, வீதி ஒழுங்குகளைக் கண்காணிக்க அனுபவம் பெற்ற போக்குவரத்துக் காவலர் பதவிக்கு தகுதியுடையோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

பல விண்ணப்பங்கள் வந்து சேர்ந்துள்ளமையால் விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவு திகதியான 6—11—1986க்கு முன் தங்கள் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

விண்ணப்பங்களை தமது பகுதிகளிலுள்ள புலிகளின் குரல் பெயர்ப்பலகைக்கு அருகாமையிலுள்ள விமர்சனப் பெட்டிக்குள் சேர்ப்பிக்கவும்.

தமிழீழ விடுதலைப் புலிகள்

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

600க்கும் அதிகமான ஆசிரியர்களுக்கு முழுச் சம்பளம் இல்லை

யாழ்ப்பாணம், அக். 29
வெளிமாவட்டங்களிலிருந்து யாழ் மாவட்டம் வந்த அறுநூறுக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் தங்கள் முழுச் சம்பளத்தையும் பல மாதங்களாக இன்னும் பெறவில்லை.

அவர்களுடைய விவரங்கள் அடங்கிய சுயவிவரக் கோவை, சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் இருந்து யாழ் கல்வித் திணைக்களத்திற்கு பல மாதங்களாக வந்து சேராததே இதற்குக்காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதனால் பல பட்டதாரி ஆசிரியர்கள், பயிற்சிக்கலாசாலை ஆசிரியர்கள், தராதரப்பத்திரம் பெற்ற ஆசிரியர்கள் ஆகியோர் பல மாதங்களாக தராதரப் பத்திரமற்ற உதவி ஆசிரியர்களுக்கான சம்பளத்தையே பெற்று வருகின்றனராம்.

இவர்களது சுயவிவரக் கோவையைச் சம்பந்தப்பட்ட மாவட்டங்களிலிருந்து பெறுவதற்கான நடவடிக்கைகளை யாழ் கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளதாக திணைக்கள உயர் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். (உ 5)

பௌர்ணமி தோறும் உண்ணாவிரதம், பிரார்த்தனை மட்டக்களப்பில் ஏற்பாடு

மட்டக்களப்பு, அக். 29
மட்டக்களப்பு மாவட்டத்தில் பௌர்ணமி தோறும் உண்ணாவிரதமும் பிரார்த்தனையும் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கைது செய்யப்பட்டு முகாம்களிலிருப்போர் விடுதலையாக வேண்டும்— கைது செய்யப்பட்டு தகவல் பெற முடியாதோர் சுகமாக வீடு திரும்ப வேண்டும் என்று பிரார்த்தித்தும்—

வன்செயல் சம்பவங்களில் இறந்தவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டும் என்று தியானித்துமே இந்த உண்ணாவிரதமும் பிரார்த்தனையும் நடைபெறும்.

முதலாவது உண்ணாவிரதமும் பிரார்த்தனையும் கடந்த பௌர்ணமி தினத்தன்று ஆனைப்பந்தி பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்றது

அடுத்த உண்ணாவிரதமும் பிரார்த்தனையும் கல்குடாத் தொகுதி சித்தாண்டியில் எதிர்வரும் (நவம்பர்) பௌர்ணமி தினத்தன்று நடைபெற வேண்டுமென அப்பகுதி மக்கள் விரும்புகிறார்கள்.

இதன் பின்னர் டிசம்பர் பௌர்ணமிப் பிரார்த்தனை பட்டிருப்புத் தொகுதி களுவாஞ்சிக்குடியிலும் நடைபெறும் எனத் தெரியவருகிறது. (உ.21)

சேவை

உங்களுக்குத் தேவையான பொருட்கள் எவையானாலும் வாங்கவும் / விற்கவும் தினமும் எம்மிடம் வாருங்கள். ஏல விற்பனை நிலையம், பொதுச்சந்தை, (சந்திச் சருகாமையில்) கோப்பாய்.

றெருசோ ஷிப்ஸ்
TERRAZZO CHIPS
IMPORTED

- கலர் பவுடர் (எல்லா வர்ணங்கள்) (GERMAN AND HOLLAND)
- அலுமினியம் தகடுகள் (18g x 16g)
- வெள்ளைச் சீமெந்து
- காபரண்டம் கற்கள் (FLOOR CUTTING STONE)
- TERRAZZO மற்றும் தரைக்குத் தேவையான சகல பொருட்களும் கிடைக்கும்.

Rs. 6/75-க்கு மேல்

றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு,
கொழும்பு-12
தொலைபேசி: 34411 - 31511

பிரயாண ஒழுங்குகள்

● டென்மார்க் ● ஜேர்மனி
● குவைத்
● சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார்,
குவைத்தில் கீழ்க்காணும் வெற்றிடங்கள் உண்டு.

Cleaners, House Boys, Gardeners, House Drivers, House Cook, Sales Boys & Girls

செல்ல விரும்புவோர் உடன் நேரடியாகத் தொடர்புகொள்ளவும். பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

சவூதி Labourersஆக செல்ல விரும்புவோரும் தொடர்பு கொள்ளவும்.

டென்மார்க், ஜேர்மனி ஆகியவற்றிற்கு அடுத்த மாதம் 10ஆம் திகதி செல்லவுள்ளோம்.

குவைத்திற்கு செல்ல விரும்புவோர் 1ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

பஸ் இல: 764
பலாலி வீதி,
கோண்டாவில்
கிழக்கு.

தொடர்பு:
N. பாலா
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,

- உங்கள் நன்மை கருதி தீவுப் பகுதியில் ஒமேகா ரவல்ஸ் & ருேர்ஸ் என்னும் பெயரில் வங்களாவடிச் சந்தியில் அமைந்துள்ளது.
- குப்பிளான் சந்திக்கு அருகாமையிலும் ஒமேகா ரவல்ஸ் & ருேர்ஸ் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

★ செய்திக்கொத்து ★

குருளைச் சாரணர் சின்னம்

யாழ்ப்பாணம், அக்.29
காங்கேசன்துறை மாவட்ட குருளைச் சாரணர் ஆண்டு விழா கடந்த 17 ஆம் திகதி பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

இவ் விழாவில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி குருளைச் சாரணர்கலந்து கொண்டு சகல போட்டிகளிலும் பங்குபற்றி பாட்டு, நடிப்பு, அணிநடை ஆகியவற்றில் முதலாம் இடத்தைப் பெற்றனர்.

குருளைச் சாரணர் எட்டுப் பேர் அதி உயர்ந்த சின்னமாகிய தங்கத் தாரகையையும் பெற்றனர்.

ஞா. செந்தூரன், மு. சதிஷ்பாலமுருகன், சோ. சிவராஜா, இ. இராஜராஜன், க. அகிலன், செ. விஜயவதனன் ஆகியோரே தங்கத் தாரகை சின்னம் பெற்றனர். (உ-10)

கூட்டம்

கிளிநொச்சி, அக். 29
கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கிளிநொச்சி கிராம அபிவிருத்தி சங்கங்களின் ஒன்றியம் எதிர்வரும் 10ஆம் திகதியன்று நிர்வாக சபைக் கூட்டம் ஒன்றினைக் கூட்டவுள்ளது.

குருகுலத்தில் நடைபெறும் இக் கூட்டத்திற்கு கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களில் இருந்து ஒன்றியத்திற்கு தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் சகலரையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டிருக்கிறது, (உ-76)

கௌரவம்

வல்வெட்டித்துறை அக். 29
யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை அருள்மிகு முத்துமாரிஅம்பாள் தேவஸ்தானப் பிரதம குருக்கள் ஸ்ரீலஸ்ரீ சோ. தண்டபாணிக தேசிகர் அவர்களுக்கு கம்பர்மலை, வல்வெட்டி, வல்வெட்டித்துறை பொதுமக்கள் சார்பாக அருள் மிகு ஸ்ரீ வன்னிச்சி அம்மன் தேவஸ்தான நிர்வாகப் பொருளாளர் திரு. நா. கந்தசாமி'பிரதிஷ்டாலங்கார சித்தாந்தஸாகரம்' என்னும் சிறப்புப் பட்டத்தை வழங்கி கௌரவித்தார். (உ- 60)

கம்பிகளோடு கம்பங்களும் களவு

வல்வெட்டித்துறை, அக். 29
தந்திக் கம்பிகளைத் திருடுபவர்கள்இப்போது தந்திக் கம்பங்களையே களவாடுகின்றனர்.

சிவில் நிர்வாக சீர்குலைவின் காரணமாக முன்னர் தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டு வந்தன. இயக்கங்களின் தலையீடு காரணமாக இது பின்னர் நிறுத்தப்பட்டது.

தற்போது வல்லைக்கும் நெல்லியடிக்கும் இடைப்பட்ட பல இடங்களில் சிலர் மீண்டும் தந்திக் கம்பிகளுடன் தந்திக் கம்பங்களையும் அடியோடு புரட்டி எடுத்துத் தங்கள் வீட்டுத் தேவைக்குப் பயன்படுத்துவதாகத்தெரிவிக்கப்படுகிறது. (உ-160)

கல்விமான்களை விரக்திக்குள்ளாக்குவதா?

துண்டுப்பிரசுரத்தில் கண்டனம்

யாழ்ப்பாணம், அக்.29
அறிஞர்களை பாதுகாக்கவும், அவர்களை வளர்க்கவும் வேண்டிய தருணத்தில் அவர்களை விரக்திக்கு உள்ளாக்கும் வகையிலான கொள்ளைச் சம்பவங்கள் கண்டிக்கப்பட வேண்டியவை.

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பேராசிரியர் குமாரவடிவேலின் இல்லத்தில் மிருகத்தனமான அணுகுமுறையில் நடைபெற்ற கொள்ளைச் சம்பவத்தை கண்டித்து யாழ் பல்கலைக்கழக மாணவர் அமைப்புக் குழுவால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்திலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

பட்டம் பதவிகளை தாங்கிக் கொண்டு அந்நிய மண்ணைத் தேடி ஓடும் மக்களுக்கு மத்தியில்எரியும்தேசத்துமாணவர்களுக்குச் சேவை செய்ய-- 79 விரிவுரையாளர்கள் தேவையான இடத்தில் 19 விரிவுரையாளர்கள் மட்டுமே முன்வந்து செயலாற்றி வருகிறார்கள்.

தேச விடுதலைப் போராட்டத்தில் அறிஞர்களின்— கல்விமான்களின்– பங்கையும் தேவைகளையும்போராட்டத்தின் இந்த வளர்ச்சி நிலையில் நாம் அறியாதவர்களாக இருக்க முடியாது. ஆயுதம் ஏந்திய போராட்டத்தில் கல்விமான்களின் பங்கை சரியான வகையில் பெற்றுக் கொள்ளாவிட்டால் போராட்டத்தின் முடிவில்முழுமக்களுக்குமான விடுதலையை உத்தரவாதப் படுத்த முடியாது போய்விடும்.— இப்படி அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-5)

மக்கள் போராட்டம் குறுகிவிடக் கூடாது

யாழ்ப்பாணம்,அக்.29
தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கியுள்ள பேரினவாத அடக்குமுறைக்கு எதிரான போராட்டம் உழைக்கும் வர்க்கப் பிரிவினரான சாதாரண மக்களையும் உள்ளடக்கிய போராட்டமாக வளர்ந்து செல்ல வேண்டுமே அன்றி வசதிபடைத்தவர்களின் போராட்டமாகக் குறுகிவிடக் கூடாது.

1966ஆம் ஆண்டு சாதி அடக்குமுறைக்கு எதிரான அக்டோபர்21 எழுச்சியின் 20ஆம் ஆண்டு நினைவாக புத்தூர் வேம்பிராயில் இடம் பெற்ற பகிரங்க பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய இடது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த கே. செந்தில்வேல் மேற்கண்டவாறு கூறினார்.

கட்சியின் பொதுச் செயலாளர் கே. ஏ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு.செந்திவேல் தொடர்ந்து பேசுகையில், ஜே. ஆர். தலைமையிலான பேரினவாத ஆளும் வர்க்கம் நாளாந்தம் தனது ஆயுத பலத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

யாழ் நகரில் போக்குவரத்து, நெருக்கடி

யாழ்ப்பாணம் அக். 29
நடைபாதை வியாபாரிகளின் நடவடிக்கைகளினால் நகரில் வாகன, மக்கள் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு பொருள்களை வாங்குவதற்காக கடந்த இரண்டு மூன்று தினங்களாக ஏராளமான மக்கள் நகரில், கூடுகிறார்கள்.

இதே வேளை இம்முறை அதிகப்படியான இடங்களை நடைபாதை வியாபாரிகள் ஆக்கிரமித்து விட்டதனால் பெரும் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதேவேளை அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக யாழ் நகரப் பகுதியில் பல இடங்களில் வெள்ளம் தேங்கி நிற்கிறது. (உ-10)

விளையாட்டரங்கு

மாவிட்டபுரத்தில்:-

உதைபந்தாட்ட இறுதிப் போட்டிகள்

காங்கேசன்துறை, அக். 29.
மாவை லயன்ஸ் கழக ஆதரவில் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமையன்று நடைபெறவுள்ளது.

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை மைதானத்தில் நடைபெற்றுவரும் இந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இப்பகுதியைச் சேர்ந்த பல உதைபந்தாட்ட அணிகள் பங்குபற்றி வருகின்றன.

இப்போட்டியின் அரை இறுதியாட்டங்கள் இன்று நடைபெறும். இந்த ஆட்டங்களில் லங்கா சீமெந்து லிமிட்டட் 'ஏ' அணியை எதிர்த்து அளவை இளம் விளையாட்டுக் கழக அணி விளையாடும்.

மாவை இரத்தினம் விளையரிட்டுக் கழக அணியை எதிர்த்து தெல்லிப்பளை கிருஸ்கொப்பேர்ஸ் 'ஏ' அணி மோதும்.

வெற்றிபெறும் அணிகளுக்கு வெற்றிக் கிண்ணங்களும் விளையாட்டு வீரர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படும். (உ-68)

சாவகச்சேரி இந்து 2 - 0 கோல்களினால் வெற்றி

யாழ்ப்பாணம், அக். 29
பாடசாலைகளுக்கிடையிலான மேற்பிரிவு உதைபந்தாட்டப் போட்டியில் மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை அணியை சாவகச்சேரி இந்துக்கல்லூரி அணி 2 — 0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது.

மாணவர் முன்னணியும், மறுமலர்ச்சிக் கழகமும் இணைந்து நடத்தும் பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் முதற்சுற்று ஆட்டம் ஒன்றிலேயே சாவகச்சேரி அணி வெற்றிபெற்றது.

கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரியில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இரு அணிகளும் விறுவிறுப்பாக மோதின.

துஷ்யந்தன், மகேந்திரன் ஆகியோர் இரு கோல்களை அடித்து தமது அணிக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்தனர்.

இந்த ஆட்டத்திற்கு திரு. ஜே. ஏ. அகஸ்தின் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர். (உ)

யாழ்ப்பாணக் கல்லூரி அடுத்த சுற்றுக்குத் தெரிவு

யாழ்ப்பாணம், அக். 29
கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற மற்றொரு மேற்பிரிவு உதைபந்தாட்டப்போட்டியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி அணி அளவெட்டி அருணோதயாக் கல்லூரி அணியை 4 0 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து அடுத்த சுற்று ஆட்டத்தில் விளையாடும் தகுதியைப் பெற்றது. இந்த ஆட்டம் வட்டுக்கோட்டையில் நடைபெற்றது.

இரு அணிகளும் இந்த ஆட்டத்தில் சிறப்பாக விளையாடின,

யாழ்ப்பாணக்கல்லூரி தரப்பில் ஜி. ஜே. ஜேசுராஜா மூன்று கோல்களையும், தேவானந்தன் ஒரு கோலையும் அடித்தனர்.

இந்த ஆட்டத்திற்கு திரு. குணசிங்கம் மத்தியஸ்தம் வகித்தார் (உ)

உசனில் கொத்தணி

யாழ்ப்பாணம்,அக்.29
யாழ் கல்வித் திணைக்களத்தால் உசன் கொத்தணி புதிய கொத்தணியாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இம்மாதம் 20 ஆம் திகதி யாழ் கல்விப் பணிப்பாளர் திரு.இரா. சுந்தரலிங்கம் சம்பிரதாயபூர்வமாக இதனை ஆரம்பித்து வைத்தார்.

எழுதுமட்டுவாள், உசன், மிருசுவில், கெற்பலி, விடத்தல்பளையைச் சேர்ந்த பாடசாலைகள் இந்த கொத்தணி அமைப்பில் அடங்கும்.

உசன் இராமநாதன் மகாவித்தியாலயம் இக் கொத்தணியின் தலைமைக் கல்லூரியாகவும், அதன் அதிபர் திரு எஸ். சிவபாதசுந்தரம் உசன் கொத்தணியின் கொத்தணி அதிபராகவும் கடமைபுரிவார். (இ-5)

மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

அடுத்த வருடம்

தொழில்நுட்பக் கல்வி அபிவிருத்தி ஆண்டாகப் பிரகடனம்

வடக்கில் ஏற்பாடு

யாழ்ப்பாணம், அக். 29
யாழ் கல்வி மாவட்டம் அடுத்த ஆண்டை தொழில் நுட்பக் கல்வி அபிவிருத்தி ஆண்டாகப் பிரகடனஞ் செய்து திட்டமிட்டுச் செயற்பட உள்ளது.

யாழ் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற முறைசாராக் கல்வித்திட்டத்தின்கீழ் குடிசார் பயிற்சியை முடித்துக் கொண்டவர்களுக்கான பட்டமளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கல்லூரி அதிபர் திரு. எஸ். மகேசவேலு தலைமைவகித்தார். திரு. சுந்தரலிங்கம் தொடர்ந்து கூறியதாவது:-

முறைசாராக் கல்வித் திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க உள்ளூராட்சி மன்றங்கள், தனியார் நிறுவனங்கள் முன்வரவேண்டும்.

அப்படிச் செய்தால் தமிழ் இளைஞர்கள் வேலை தேடி வெளிநாடு செல்லவேண்டிய நிலை ஏற்படாது. அவர்கள் எமது பிரதேச பொருளாதார விருத்தியில் ஈடுபடமுடியும்.

நாட்டின் பொருளாதார விருத்தியில் விவசாயம், கடற்றொழில், கைத்தொழில் முக்கிய பங்கு வகிக்கின்றன. எனவே நமது இளைஞர்களின் தொழில் நுட்பத் துறையினை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் 1987ஆம் ஆண்டைத் தொழில் நுட்பக் கல்வி அபிவிருத்தி ஆண்டாகப் பிரகடனஞ் செய்துள்ளோம்.

இதனால் உடை நலுங்கா உத்தியோகங்கள் மட்டும் அன்றி உடல் உழைப்பால் ஈடுபடும் தொழில்களும் மகத்துவம் வாய்ந்தவையே என்ற மனப்பாங்குஇவர்கள் மத்தியில் மலரும்.
— இவ்வாறு திரு. சுந்தரலிங்கம் குறிப்பிட்டார்.

தொழில் நுட்பக்கல்வி அலுவலர் திரு. ச. சுப்பிரமணியம் தமது உரையில்;-

வேலையற்று இருக்கும் இளைஞர்கள் உள்ளூர் மூலவளங்களைப் பயன்படுத்தி உடலுழைப்பில் ஈடுபடும் தொழில்களைப் பயின்று சமூகத்துக்குச் சேவையாற்ற வேண்டும் என்றார்.

யாழ் பல் தொழில் நுட்ப நிறுவன அதிபர் திரு. எஸ். இராஜேந்திரமும் உரையாற்றினர். (உ-9)

பிள்ளைகளுக்கு உதவி

யாழ்ப்பாணம், அக்.29
இனப்பிரச்சினையால்— வன்செயலால்— பாதிப்புக்கு உள்ளான பிள்ளைகளுக்கு நிவாரணம்வழங்கும் நடவடிக்கைகளை அரசு சார்பற்ற அகதிகள் புனர்வாழ்வுச் சங்கம் மேற்கொண்டு வருகிறது.

பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் பெயர், வயது, பாதிக்கப்பட்ட விதம், தேவைப்படும் புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள் ஆகிய விவரங்களைத் திட்டமிடல் உதவிப் பணிப்பாளருக்கு நவம்பர் மாதம் 5ஆம் தேதிக்கு முன்னர் அறிவிக்க வேண்டும் என்று பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள்கோரப்பட்டு உள்ளனர்.

இவ்வாறு பாதிப்படைந்த மாணவர்கள் க.பொ.த. (சாதாரண பரீட்சை) படிப்பார்களாயின் அவர்களுக்குக் கடந்த கால கேள்வித் தாள்களை அனுப்பி வைக்க யாழ் சென். ஜோன்ஸ் கல்லூரி இண்டரக்ட் கழகம் முன்வந்து உள்ளது. (உ-9)

Patrician Institute of Higher Studies

1. COMPUTER PROGRAMMING COURSE:-
For Professionals and School leavers (6 Months)
Lectures by: Mr N. Sundararajah B.Sc (Eng) Hons (London) A.M.I.C.E.
Weekend Courses. Lectures in A.C. Room. Practicals on APPLE II.
2. MOTOR MECHANISM:
(மோட்டார் மெக்கானிசம்)
6 மாத கால பயிற்சி.
3. LATHE OPERATOR:
(கடைச்சல் யந்திர இயக்குநர்)
3 மாத கால பயிற்சி
4. ARC WELDING:
(எலெக்ரிக் வெல்டிங்)
3 மாத கால பயிற்சி

Details from;
Registrar,
PATRICIAN INSTITUTE
OF HIGHER STUDIES,
59, St. Patrick's Road,
Jaffna.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

உதய சங்கற்பம்

உன்னையே நீ எண்ணிப் பார்! நம்பு! நம்பிய பின் அதில் உறுதியாக நில். அதுவே நமக்குத் தேவை.

— சுவாமி விவேகானந்தர்

உதயன்

இல. 15, 2வது ஒழுங்கை
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24805
22073
29-10-1986 த. பெ. இல. 23

வீதிகளில் மரணப் பொறிகள்

மழை வெள்ளத்தில் மூடப்பட்டிருந்த வீதிக் குழிக்குள் விழுந்ததால், சிறுவன் ஒருவன் அநியாயமாக உயிரிழந்தான். ஒன்பது வயதுப் பாலகனைப் பலி கொண்ட அந்தக் குழி, ஒட்டுமடம் பகுதியில் இருந்ததாகச் செய்தி கூறுகிறது.

ஒட்டுமடம் யாழ்ப்பாணம் மாநகரசபைப் பகுதியைச் சேர்ந்தது. ஒட்டுமடத்தில் உள்ளது போல நகரின் ஏனைய பகுதிகளிலும் நிரப்பப்படாத வீதிக் குழிகள் ஏராளமாக உள்ளன.

மழை தொடர்ச்சியாகப் பெய்யும் காலம் வந்ததும் அந்த வீதிக் குழிகள் இன்னும் எத்தனை பேருக்குக் காலனாக மாறுமோ தெரியாது! வீதிகளில் எத்தனை மரணப்பொறிகளோ?

ஆயுதப்படையினரின் துப்பாக்கிகளும் ஷெல்களும் தமிழ் மக்களின் உயிரைக் குடிக்கும்போது அரசாங்கத்தைக் கண்டிக்கிறோம். திட்டுகிறோம்.

வீதிக் குழிகள் பயணிகளைக் கொல்வதற்கு யார் பொறுப்பு? எவரைக் கண்டிப்பது?

யாழ்ப்பாணம் மாநகரசபைப் பகுதியினரையா? அல்லது வீதிகள் பராமரிப்புக்குப் பொறுப்பான பெருந்தெருக்கள் திணைக்களத்தினரையா? அல்லது யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச்சபையையும் அதன் உப அலுவலகங்களையுமா?,,

மேற்கண்ட சாராரில் ஒரு பகுதியினர் தனித்துப் பொறுப்பாக இருந்தாலும் சரி, கூட்டாகப் பொறுப்பாக இருந்தாலும் சரி அவர்கள் கண்டிக்கப்பட வேண்டியவர்கள்.

வீதிக் குழிகள் நிரப்பப்படாமல் இருப்பதற்குச் சம்பந்தப்பட்ட ஒரு சாரார்தான் பொறுப்பு அல்லது காரணம் என்று இனங்காணப்படும் பட்சத்தில், அவர்கள் ஏதோ ஒரு நொண்டிச் சாட்டோடு வருவார்கள். தங்களுக்கு உள்ள ஏதேதோ வசதியீனங்கள், குறைகள் எல்லாவற்றையும் பட்டியல் போடுவார்கள் "இந்தக் கஷ்டங்களுக்கு மத்தியில் நாம் என்ன செய்வது?'' என்று கேள்வியும் எழுப்புவார்கள்.

மக்களின் உயிர் பறிக்கப்படும்போது, அதிகாரிகள் காரணகாரியங்களைக் கூறித் தமது பொறுப்பிலிருந்து தப்பித்துக் கொள்ள முயல்வது விரும்பத்தக்கதல்ல.

அவ்வாறு செய்வது, செய்ய முயல்வது அவர்கள் தமது கடமையிலிருந்து தவறிவிட்டார்கள் என்பதனையே நிலைநாட்டும்.

வடபகுதியை எடுத்துக் கொண்டால் இங்கு இப்போது பணிபுரிபவர்கள், அதிகாரிகள், உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள் எல்லோரும் தமிழர்கள். இங்கு வாழ்பவர்களும் தமிழர்கள். எனவே மக்களின் உயிரைப் பறிக்கும் விடயங்களிலும் அதிகாரிகள், உத்தியோயோகஸ்தர்கள், ஊழியர்கள் ஏனோ தானோ என்று இருப்பதோ அல்லது ஏதாவது ஒரு காரணத்தை—சாட்டைச் சொல்லிப் பொறுப்பிலிருந்து நீங்கி விடுவோம் என நினைப்பதோ பெரும் குற்றமாகும்.

வசதியீனங்கள், குறைகள் இருக்கலாம். அவற்றை நிவிர்த்தி செய்ய முடியாத கஷ்ட நிலையும் நிலவலாம். ஆனால் உயிராபத்து விளைக்கக் கூடிய அலுவல்களை இனங்கண்டு அவற்றை எப்பாடுபட்டும் சரிசெய்வது மிகவும் அவசியமாகும். கிடைக்கும் சிறு வசதியில் தானும் அவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து காரியங்களைச் செய்ய வல்ல முன் யோசனையும், திட்டமிடலும் அவசியம்.

முயற்சி திருவினை ஆக்கும். மனம் இருந்தால் இடமுண்டு. இந்த இரண்டு முதுமொழிகளையும் செயல்மூலம் உறுதிப்படுத்தினால் எந்த வசதியீனத்தின் மத்தியிலும் உயிராபத்துகளைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

இது விஷயத்தில், பொதுமக்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உதவ வேண்டும். வீதிக் குழிகள் மட்டுமன்றி முறிந்து விழும் நிலையில் உள்ள மின்கம்பங்கள், தொலைபேசித் தூண்கள் என்பன குறித்து முற்கூட்டியே சம்பந்தப்பட்டவர்களுக்குத் தகவல் கொடுக்க வேண்டும்.

அதோடு நிற்காது, வீதிகளில் குழிகளைத் தோண்டுதல், வெள்ளம் ஓடுவதற்காக வீதிகள் சேதமுறும் வகையில் அவற்றை வெட்டுதல், மின்கம்பங்களில் நினைத்த நினைத்த மாதிரி கம்பிகளை கொழுவுதல் ஆகியவற்றைப் பொது மக்கள் அறவே தவிர்க்க வேண்டும்.

மக்களைப் பலி கொள்ளக் கூடிய விடயங்களில் பொறுப்பில்லாமல் நடக்கும் அதிகாரிகளையும், அக்கறை காட்டாத மக்களையும் சமூக நலனில் அக்கறையில்லாதவர்கள் என்று மட்டுமல்ல மக்கள் விரோதிகள் என்றும் எடை போடலாம்,

தகவல் கொடுக்க தவறியவருக்கு நான்கு வாரச் சிறை

கொழும்பு, அக். 29 தீவிரவாத இயக்கத்தின் உள்ளூர்த்தலைவர் ஒருவர் பற்றித் தகவல் கொடுக்கத் தவறிய குற்றத்தை ஒப்புக்கொண்ட மூதூரைச் சேர்ந்த தமிழ்க் கிராமவாசி ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. கே. விக்னராஜா 4 வார சாதாரண சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்ப

(4 ஆம் பக்கம் பார்க்க)

வெட்டுக்கிளி அபாயம்

ஓசாக்கா, அக். 28 கடந்த காலத்தில் என்றும் இல்லாதவாறு பெரும் வரட்சியால் பாதிக்கப்பட்டிருந்த ஆபிரிக்காவின் பல பகுதிகள் தற்பொழுது பயிர்களை அழிக்கும் வெட்டுக்கிளிகளின் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளன.

ஜோர்தான், தென் லெபனான், இந்தியா போன்ற நாடுகளும் கடந்த காலங்களில் பெரும் தொகையாய் வந்து குவிந்த இந்த வெட்டுக்கிளிகளால் பெரிதும் பாதிப்பை அடைந்திருந்தன.

ஐ. நா. ஸ்தாபனத்தின் அமெரிக்கப் பிரதிநிதி ஜோஸப் ரீட் இந்த வெட்டுக்கிளிகளை ஒழித்துக் கட்டாதுவிடின் உணவு உற்பத்தி பெரிதும் பாதிப்படையும் என எச்சரித்துள்ளார். (ஒ)

26 அங்குல மனுஷி

ஜகார்த்தா, அக். 28 இந்தோனேஷிய பெண் ஒருவர் உலகில் குறைந்த உயரம் உள்ளவர் என்ற சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

மத்திய ஜாவாவில் நடைபெற்ற உலகின் உயரம் குறைந்த பெண்களுக்கான போட்டியில் வாபினா என்ற இந்த 55 வயது பெண் முதலிடத்தைப் பெற்றார்.

இவரது உயரம் 26 அங்குலம் மட்டுமே.

இவருக்கு முன்னர் இந்த உலக சாதனையை ஏற்படுத்தியவரின் உயரம் 30அங்குலமாக இருந்தது. (ஒ)

இரிக்கெட் குழு; தடையை அகற்ற உத்தரவு

கான்பெரா, அக். 28 அவுஸ்திரேலியாவின் முன்னாள் கிரிக்கெட் கப்டன் கிம்புறாஸ் தென் ஆபிரிக்காவிற்குச் சென்ற ஒரு கிரிக்கெட் குழுவிற்குத் தலைமை வகித்ததற்காக அவர் மீது விதிக்கப்பட்ட தடையை நீக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலியாவின் சமஷ்டி நீதிமன்றம் ஒன்று அவுஸ்திரேலியா கிரிக்கெட் சங்கத்திற்கு இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

கடந்த வருடம் அரச அங்கீகாரமின்றி தென் ஆபிரிக்காவிற்குச் சென்ற கிரிக்கெட் குழுவிற்குத் தலைமை வகித்ததற்காக கிம்புறாஸ் அவுஸ்திரேலிய கிரிக்கெட் குழுவில் அங்கம் வகிக்க முடியாது என தடை விதிக்கப்பட்டிருந்தது.

இத்தடையை நீக்குமாறு இவர் செய்த மனுவிற்கு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. (ஒ)

கிளர்ச்சியாளர் மறுவாழ்வு பெறுவர்

மணிலா, அக். 28 பிலிப்பீன்ஸில் ஆயுதப் போராட்டத்தைக் கைவிடும் கம்யூனிஸ்ட் கிளர்ச்சியாளர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் திட்டத்திற்கென அரசாங்கம்100 கோடிரூபாவை ஒதுக்கியுள்ளது.

கிளர்ச்சி நடவடிக்கைகளை கைவிடுவோருக்கென தொழில்வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கவும் அவர்களை விவசாயத்தில் ஈடுபடுத்தவும் இந்தப்பணம் பயன்படும். (ஒ)

அமெரிக்காவில் குடிவரவு சட்டம் திருத்தப்பட்டது

வாஷிங்டன், அக்.28 அமெரிக்க மக்கள் பிரதிநிதிகள் சபை (காங்கிரஸ்) குடிவரவு சீர்திருத்தச் சட்ட மூலம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

சட்ட விரோதமாக வெளிநாட்டவர்கள் அமெரிக்காவினுள் வருவதைத்தடுப்பதற்கான ஷரத்துக்கள் இந்தச் சட்டமூலத்தில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளன.

அமெரிக்காவின் குடிவரவுச் சட்டங்கள் 21 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் திருத்தப்படுகின்றது.

சட்ட விரோதமாக அமெரிக்காவரும் வெளிநாட்டவர்களுக்கு தொழில் வழங்கும் நிறுவனங்கள் புதிய சட்டங்களின்படி தண்டனைக்குள்ளாக நேரிடும்.

அதே சமயத்தில் 1982 ஆம்ஆண்டுஜனவரிக்கு முன்னர் சட்டவிரோதமாகக் குடியேறிய சகலருக்கும் சட்டபூர்வ அங்கீகாரம் வழங்கப்பட்டு நிரந்தர குடியுரிமையும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் 20 லட்சத்திற்கும் அதிகமான வெளிநாட்டவர்கள் அமெரிக்காவினுள் குடியேற முயற்சி செய்கின்றார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

எயிட்சை மறைத்த திரை நடிகர்

வாஷிங்டன், அக். 28 எயிட்ஸ் நோயினால் மரணமடைந்த பிரபல ஹொலிவூட் நடிகர் றொக் ஹட்ஸன் மரணமடையும் வரை தமக்கு நோய் பிடித்த தகவலை வெளியிட மறுத்து விட்டார்.

இவ்வாறு அவரது பிரத்தியேக மருத்துவர் தெரிவித்தார்.

றொக் ஹட்ஸன் நிச்சயமாக குணமடைந்துவிட முடியும் என்ற நம்பிக்கையுடன் இருந்ததால் மரணத்தைப் பற்றிச் சிந்திக்கவேயில்லை என மேலும் அந்த மருத்துவர் தெரிவித்தார். (ஒ)

உலக தம்பதிகள்

ஜகார்த்தா, அக். 28 இந்தோனேஷியாவில் நீண்ட காலம் தம்பதிகளாக வாழ்ந்தவர்களுக்கான உலகளாவிய போட்டியொன்று நடைபெற்றது.

இந்தோனேஷியாவைச் சேர்ந்த 110 வயதுடைய கணவரும் அவரது 100வயது மனைவியும் இப்போட்டியில் முதலாமிடம் பெற்றனர்.

இவர்கள் கடந்த 83 வருடகாலமாக தம்பதிகளாக வாழ்ந்துள்ளார்கள்.

இவர்களுக்கு 11 பிள்ளைகளும் 74பேரர்களும் 24 பூட்டர்களும் உள்ளனர்.

இரண்டாவது இடத்தை சுவிஸ் தம்பதிகள் 79 வருடமாக வாழ்ந்து பெற்றனர்.

மூன்றாவது இடம் ரஷ்யா தம்பதிகளைச் சென்றடைந்தது. இவர்கள் 78 வருடங்கள் தம்பதிகளாக வாழ்ந்துள்ளனர். (ஒ)

வெளி உலகில்

அரபு நாடுகள் சிரியாவிற்கு ஆதரவு

திரிபோலி, அக். 28 பிரிட்டனுடனான பிரச்சினையில் சிரியாவிற்கு முழு ஆதரவையும் வழங்க சகல அரபு நாடுகளும் முன்வந்துள்ளன.

இஸ்ரவேலில் இரகசிய புலனாய்வுத் துறையின் சொற்படியே பிரிட்டன் செயற்பட்டு வருவதாக அரபுலீக்கின் தலைமைச் செயலரான சாட்லீக் கெபி டூனிஸியாவிற்கான பிரிட்டிஷ் தூதரை அழைத்து அரபு நாடுகளின் சார்பில் தெரிவித்தார்.

லண்டனில் இஸ்ரவேலின் விமானம் ஒன்றைத் தகர்த்து விடுவதற்கான பயங்கரவாதிகளின் முயற்சியில் சிரியா சம்பந்தப்பட்டிருந்ததாக பிரிட்டன் கடந்தவாரம் சிரியாவுடனான ராஜதந்திர உறவுகளைத் துண்டித்தது

பிரிட்டனுடனான ராஜதந்திர உறவுகள் அனைத்தையும் முறித்துக் கொண்டு பிரிட்டிஷ் வங்கிகளில் இருந்து தத்தமது பணத்தை எடுத்துக் கொள்ளும்படி லிபியா அரபு நாடுகளைக் கேட்டுள்ளது. (ஒ)

தாய்வான் தஞ்சம் அளிக்கும்?

தென்கொரியாவிற்குக் கடந்த வெள்ளிக்கிழமை விமானம்மூலம் போய்ச் சேர்ந்த சீனக்கடற் படையின் விமானி தமக்குத் தாய்வானில் அரசியல் தஞ்சம் அளிக்குமாறு கோரியுள்ளார்.

சீனக் கடற்படையில் ஸ்கொட்ரண்ட் லீடர் என்ற உயர் பதவி வகிக்கும் 21 வயதான லீங் சையா லீங் என்ற இளைஞர் மிக் 19 விமானத்தில் மஞ்சள் கடலைக் கடந்து தென்கொரியாவில் விமானத்தை இறக்கினார்.

தென் கொரியாவில் உள்ள தாய்வான் நாட்டுத்தூதுவர் இந்த விமானிக்கு அரசியல் தஞ்சம் அளிக்கத்தயாராக இருப்பதாக அறிவித்தார். (ஒ)

மேடையில் கத்துவோர் சீருடை அணிந்து யாழ். செல்வார்களா?

நிதி அமைச்சர் கேட்கிறார்

கொழும்பு, அக். 29 தாய் நாட்டைப் பாதுகாப்போம் என்று பொது மேடைகளில் ஏறி நின்று கத்திப் பேசுவதில் பயனில்லை. அப்படிப் பேசுபவர்கள் சீருடை அணிந்து யாழ்ப்பாணம் சென்று தீவிரவாதிகளை எதிர்த்துப் போராட வேண்டும்.

இப்படிச் சொன்னார் நிதி அமைச்சர் றொனி டிமெல்.

புளத் சிங்கள தொகுதியில் உடவெல என்னும் இடத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசிய நிதி அமைச்சர் மேலும் சொன்னதாவது;—

எமது நாடு யுத்தத்தில் ஈடுபட்டுள்ளது. நாம் இப்படி சண்டை பிடித்துக் கொண்டே இருக்க முடியாது. இராணுவம், கடற் படை, விமானப்படை, பொலீஸ் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் மட்டும் இந்த யுத்தத்தில் உயிரிழக்கவில்லை, நூற்றுக்கணக்கான அப்பாவி மக்களும் உயிரிழக்கின்றார்கள்.

— இப்படி இரத்த வெள்ளம் ஓடுவது நிறுத்தப்படவேண்டும். அரசாங்கத்தைக் கண்டிப்பதினால் இது நிறுத்தப்படப் போவது இல்லை.

— இப்படி அமைச்சர் சொன்னார். (உ - எ)

மட்டக்களப்பில் காணாமல் போயுள்ள 12 பேரின் நிலை என்ன?

உறவினர்கள் பரிதவிப்பு

மட்டக்களப்பு, அக். 29 மட்டக்களப்பு பஸ் நிலைய குண்டு வெடிப்பு சம்பவத்தையடுத்து ஆயுதப்படையினரின் நடவடிக்கையால் அப்பகுதியிலிருந்து காணாமற்போன 12 பேரின் நிலை என்ன? அவர்களுக்கு என்ன நடந்தது என்று புரியாமல் உறவினர்கள் தவிக்கின்றார்கள்.

ஒரு மாத காலமாக இப்பகுதியிலுள்ள சகல ஆயுதப்படை முகாம்கள் பொலீஸ் நிலையங்கள் ஆகியவற்றுடன் உறவினர்கள் பல தடவைகள் தொடர்பு கொண்ட போதிலும் "ஆள் இல்லை'' என்ற பதில் தான் கிடைப்பதாக உறவினர்கள் வேதனையுடன் தெரிவிக்கின்றார்கள்.

தகவல் பெறமுடியாத 12 பேர் விவரம் வருமாறு:

எஸ். தயாபரன் (20) எஸ். ராஜேஸ்வரன் (18) இருவரும் சகோதரர்கள்; ஈஸ்வரன் லேன் வாசிகள்.

எஸ். சிவசிலன் (27)— வன்னியனார் தெரு, பி. சேகரன் (27) ஏறாவூர் 4, க. மகேந்திரகுமார் (23) — அதிகார் வீதி. எம். சிவகுமார் (20) மதுரையடி வீதி, க. இளையதம்பி அன்ரனி (62)— தேவாலய பணியாளர், இ. விஜயன் (22) — 2 ஆம் குறுக்குத் தெரு, மா. வேல்நாயகம் (32) — காரைதீவு, ரீ. சிவயோகம் — மட்டுநகர், பற்றிக் கிருபைநாதன் (30) — கல்முனை, ரி. தயாளன் (28) — முறக்கொட்டான் சேனை.

தகவல் பெறமுடியாத 12 பேரின் உறவினர்கள் அவர்கள் திரும்பி வருவார்கள் என்ற நம்பிக்கையிழந்த நிலையில் [illegible] மரணக் கிரியைகளை நடத்தி வருகின்றார்கள். (உ-21)

போஷாக்கு பற்றி கருத்தரங்கு

முல்லைத்தீவு, அக். 29 போஷாக்கு வாரத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கான போஷாக்குக் கருத்தரங்கு ஒன்று கடந்த புதன் கிழமை முல்லைத்தீவு மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட கல்வி அதிகாரி திரு. சி. தியாகராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மங்கள விளக்கேற்றி கருத்தரங்கை ஆரம்பித்து வைத்தார்.

முல்லைத்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சர்வானந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் மிருக வைத்திய அதிகாரி திரு. அகிலானந்தன் திட்டமிடல் பிரிவைச் சேர்ந்த திரு. கே. தியாகராசா ஆகியோர் கருத்துரை வழங்கினர். (உ-92)

சமய சந்நிதிகளில்

கேதாரகௌரி விரதம்

கிளிநொச்சி, அக். 29 கிளிநொச்சி, இரணைமடு ஸ்ரீ கனகாம்பிகை அம்பாள் ஆலயத்தில் இம்முறை கேதாரகௌரி விரதம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் முதலாம் திகதி இது முடிவடையும். (இ-76)

காமேஸ்வரி பூசை

சாவகச்சேரி, அக். 29 நவராத்திரியை அடுத்துவரும் பூரணைதினத்தில் நடைபெறும் காமேஸ்வரி பூசை சரசாலை இலந்தைத்திடல் அருள்மிகு ஸ்ரீவீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தில் பக்திபூர்வமான நிகழ்ச்சிகளுடன் இடம்பெற்றது. (இ-31)

பொய்யாமொழி

குறள்:

தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.

பொருள்:

ஒருவன் தன் நெஞ்சம் அறிவதாகிய ஒன்றைக் குறித்துப் பொய் சொல்லக்கூடாது; பொய் சொன்னால் அதைக் குறித்துத் தன் நெஞ்சமே தன்னை வருத்தும்.

மனித வாழ்வை நெறிப்படுத்துவன சமயங்கள்

சமாதான பிரார்த்தனையில் உரை

இளவாலை, அக். 29 ''மனித இதயமே சமாதானவாழ்வுக்குப் பொறுப்பு. அந்த மனித இதயத்தை உண்மை, நீதி, நேர்மையில் நிலை நிறுத்துவதற்கு சமயங்களே பொறுப்பாயிருக்கின்றன. எனவேதான் பாப்பரசர் எல்லாச்சமயங்களும் ஒன்று சேர்ந்து எல்லாம் வல்ல பரம்பொருளை உண்மையான சமாதானத்தை அளித்தருள பிரார்த்திக்கும்படி இந்த விசேட நாளை ஒதுக்கியுள்ளார்''

கடந்த, திங்கட்கிழமை காலை இளவாலை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்ட நான்கு குருமார் ஒன்று சேர்ந்த பூசைப்பலிவேளை அருள் திரு மரியசெபஸ்ரியன் ஒ. எம். ஐ. அடிகளார் தமது அருளுரையில் மேற்கண்டவாறு கூறினார்.

இளவாலை மறைமாவட்ட முதல்வரும் சென் ஹென்றீஸ் கல்லூரி அதிபருமான அருள் திரு. அன்ரன் இராசநாயகம் தலைமையில் சமாதானத்துக்கான ஆராதனையும் பிரசாத வழங்கலும் நடைபெற்றன.

அடிகளார் தொடர்ந்து கூறுகையில், ''மனித இருதயத்தில் குடிகொண்ட அதிகாரவேட்கை, மிஞ்சிய இனப்பற்று, உண்மையை இருட்டடிப்புச் செய்தல் ஆகியவை காரணமாக ஜனநாயகம் புறக்கணிக்கப்பட்டு பலாத்காரமும் பயங்கரவாதமும் தலைதூக்குகின்றது.

இன்று உலகம் எங்கும் ஆயுதம் ஏந்துவதே அவசிய வழியெனச் சாதிக்கிறது. இந்நிலை மாறி மனித இதயங்கள் அன்பு, நீதி, உரிமை ஏற்றல், மனிதமாண்பில் வாழல் என்னும் உயர் குணங்களுக்குத் திரும்பவேண்டும் என்றார். (உ-48)

கைதான சிப்பாய்களை விடுவிக்க

மனிதாபிமான முறையில் முயற்சி

வேண்டும் எனக் கோரிக்கை

கொழும்பு, அக்.29 புலிகளினால் சிறைபிடிக்கப்பட்ட இரண்டு சிப்பாய்களையும் விடுவிக்க மனிதாபிமான முறையில் இலங்கை அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

சிறைபிடிக்கப்பட்டுள்ள இரண்டு சிப்பாய்களில் ஒருவரான இரண்டாவது லெப்டினன்ட் சந்திரசிறியின் தம்பி இவ்வேண்டுகோளை கொழும்புப் பத்திரிகைகளுக்கு விடுத்திருக்கிறார்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் வைத்து எனது சகோதரருக்கு சத்திரசிகிச்சை செய்யப்பட்டது.

அப்போது அவருக்கு தமிழ் இளைஞர்கள்தான் இரத்ததானம் அளித்தனர். இது ஒரு மனிதாபிமான நடவடிக்கை.

தமிழ் இளைஞர்களின் மனிதாபிமான உணர்வை இது காட்டுகிறது.

இதே மனிதாபிமானத்தை இலங்கை அரசும் காட்டி சிறை வைக்கப்பட்டுள்ள சிப்பாய்களை விடுவிக்க முயற்சி எடுக்க வேண்டும்.

இப்படி சந்திரசிறியின் தம்பி தெரிவித்தார் என்று கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. (உ-எ-21)

புதிய கட்சிக்கு கிளை

அமைக்க முயற்சி

கொழும்பு, அக். 29 கொழும்பில் புதிதாக உருவாகும் சிங்கள அரசியல் கட்சியின் கிளைகளை நாடு முழுவதிலும் அமைக்க பிரபல சட்டத்தரணி ஏ.ஸி.குணரத்ன கியூ.ஸி. தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு ஓட்லண்ட்ஸ் வாசஸ்தலத்தில் கடந்த ஞாயிறு நடந்த கூட்டத்தில் இது பற்றி தீர்மானிக்கப்பட்டது,

குழுவின் செயலாளர்களாக டாக்டர் காமினி விஜேயசேகரா, திரு. ருக்மன் சேனநாயக்கா தெரிவு செய்யப்பட்டனர். (உ-எ-ஐ)

* Processing Free
* விற்பனை வர்ண புகைப்படச் சுருள்கள்
KODAK — FUJI — KONICA
SAKURA — FORTE — TUDOR
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 23628

உதயன்
29 - 10 - 1986 புதன்கிழமை

அன்புடன் அழைக்கின்றது!
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
* தரமான வர்ண நிழற்படப் பிரதிகள்
* கம்பியூட்டர் முறையில்
* குறைந்த செலவில்
* சிறந்த சேவையில்
பெற்றுக்கொள்ளலாம்.

வித்தாரம்

என்ன முரளியார், தீபாவளிக் கொண்டாட்டத்துக்கு ஆயத்தம் எல்லாம் நடக்குது போலை.

ரவுணிலை பஸ் நிலையப் பக்கமாக உள்ள அங்காடியிலை தலைக்கறுப்புத் தெரிஞ்சமாதிரி ஒரு ஞாபகம்.

என்ன உடுப்புகள், மற்றும் பலசரக்குச் சாமான்கள் எல்லாம் நேர காலத்தோடை வாங்கியாச்சுப் போலை.

கடைசி வரையும் காத்திருக்காமல் நேரத்தோடை 'ஷொப்பிங்கை' முடிக்கிறது நல்லது தான். அதுக்கும் எல்லாருக்கும் காசு வசதி வேணுமே! பணம் இல்லாதவனுக்கு எங்கையப்பா கொண்டாட்டமும் குதூகலமும்.

பாத்தியே எங்கடை யாழ்ப்பாணம் பாசார் பக்கத்தை! கொழும்பிலை கோட்டையும் புறக்கோட்டையும் தோத்துப் போய்விடும்.

அங்கை கொழும்பிலை' புதுவருஷம், கிறிமஸ்மஸுக்குசனம்படைஎடுக்குமாப்போலை எல்லே இங்கையும் சனக் கூட்டம் காலையிலை தொடக்கம் பின்னேரம் வரையும் அலை மோதுது.

மழை பெய்தாலென்ன வெள்ளம் போட்டால் என்ன, சேறு அடிச்சால் என்ன சனத்துக்கு அதுகளைப்பற்றி கவலையுமில்லை, அக்கறையும் இல்லை. நடக்கிறது நடக்கட்டும் தீபாவளி 'ஷொப்பிங்' செய்யிறதுதான் எண்டு வெளிக்கிட்டு விடுகுதுகள்.

அல்லாட்டால் இருந்திருந்தாப்போலை ஷெல் அடி நடக்கிற யாழ்ப்பாணம் ரவுணுக்குச் சனம் அள்ளுப்படுகுது எண்டாப் பாரேன்.

சனத்துக்கு இப்ப மரண பயம் குறைஞ்சு போச்சு. எப்பவும் இருந்தாப் போல சாகிறது தானே. இருக்கயிக்கை கொண்டாடுகிறதுகளைக் கொண்டாடி விடுவம் எண்டும் நினைக்குதுகள் போலை.

முந்தியெண்டா யாழ்ப்பாணத்திலை கடையளிலை தான் தீபாவளி உடுப்பு எடுக்கிறது. இப்ப கொஞ்சக் காலமாய் குறிப்பாய் 83க்குப் பிறகு அங்காடிக் கடையளிலைதான் பிஸ்னஸ் கூட.

ஷொப்பிங், மாக்கெற்றிங் எல்லாத்திலையும் இப்ப பொம்பிளையள் தான் முக்கிய பங்கு. முக்கிய பங்கென்ன முன்னுக்கு நிக்கினம். அதிலை பிழை ஒண்டுமில்லை.

ஆனால் அவை என்னெண்டா ஒரு சீலைக்குத் தோதான 'பிளவுஸ்' எடுக்கிறதுக்கு ஐம்பது கடைப்படியள் ஏறி இறங்குவினம். அவையோடை கூட வாற ஆம்பிளையள் பாவங்கள்!

இப்ப 'பிளவுஸ்' எடுக்கிற பொம்பிளையள், பெட்டையள் குறைவு எண்டு தான் சொல்ல வேணும். எல்லாரும் வெள்ளைக்காரர் மாதிரி கவுணும், ஸ்கேட்டும் எண்டெல்லே பாத்து எடுக்கினம்.

உந்த உடுப்பு விஷயத்திலை ஒரு சங்கதி உண்டு. சில சில பேருக்கு அவையின்ரை உடல்வாகுக்கு ஒத்த மாதிரி சில சில உடுப்புத்தான் எடுப்பாக இருக்கும். ஆனால் இப்ப அது ஒண்டும் பாக்கிறயில்லை. நாலு பேர் ஒரு உடுப்பைப்போட்டு விட்டாப் பிறகு நாப்பது பேரும் அதைத் தான் தேடித் திரிவினம்.

நாலு பிள்ளைப் பெத்தவையும் பதினாறு வயதுக் குமரியள் போடுற சிலிட் கவுணைத்தானே தேடி வாங்கிப் போட்டுக்கொண்டு வெளியிலை திரியினம்.

எங்களுக்கெண்டு உடுபுடவையிலை ஒரு தனிக் கலையும், தனிக்களையும் உண்டு எண்டதை நம்மிலை பல பேர் மறந்து போறோம்.

ஒரு இனத்தின்ரை தனித்துவம் கலை, கலாசாரங்களிலை மட்டுமிலலை உடைகள், உபசாரம் செய்தல், பழக்க வழக்கங்கள் என்பவற்றிலும் தங்கியிருக்குத் தெரியுமோ?

சாப்பாட்டு வகைகளிலை, அவற்றைப் பிறருக்குப் பரிமாறும் விதத்திலை கூட இனங்களின் தனித்துவம் தங்கியிருக்குது எண்டு அறிஞர்கள் சொல்லுகினம்.

அரசியல் விடுதலைக்காக எங்கடை அருமைத் தம்பிமார் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிற காலத்திலை எங்கடை கலாசாரத்தையும் நடைமுறையிலை காப்பாற்ற வேணுமப்பா...

இளவல்களின் அறிவுப்பசிக்கு
விருந்து படைக்க
வந்துவிட்டான்!
"அர்ச்சுனா"
* அறிவுலக அறிமுகம்
* கணிதப்புதிர்
* எண் சிலம்பம்
* பயணம் தந்த பாடம்
* சிந்தனைக் கட்டுரைகள்
* குட்டிக் கதைகள்
* கருத்தோவியங்கள்
* கணனி நிகழ்ச்சித் திட்டம்
* சிந்தனைக் கருவூலங்கள்
உதயன் நிறுவனம் வழங்கும்
"தீபாவளிப் பரிசு"
அர்ச்சுனா
(திங்கள் இதழ்)
கண்கவர் வர்ண அட்டைப் படத்துடன்
அர்ச்சுனா விற்பனையாகின்றான்
நமது விநியோகஸ்தர்களிடம்
கேட்டு வாங்குங்கள்.
விலை ரூபா 3-0 மட்டுமே

1987 முதல் அமுலாகிறது

ஐக்கிய நாணய சங்கங்கள் மூலம் வீடமைப்புக் கடன்

யாழ்ப்பாணம், அக். 29

தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் வழங்கப்படும் வீடமைப்புக் கடன்கள் 1987 இல் இருந்து ஐக்கிய நாணய சங்கங்கள் மூலமே வழங்கப்பட உள்ளன.

இச் சங்கங்களின் உறுப்பினர்களாகச் சேருபவர்கள் தான் வீடமைப்புக் கடன் பெற உரித்துடையவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் இத்திட்டம் சண்டிலிப்பாயில் இந்த ஆண்டு பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

விண்ணப்பதாரர்களை பரிசீலனை செய்யும் கிராமோதய மட்டத்திலான குழுவில் இனி கிராம சேவையாளர், விசேஷ சேவை அதிகாரி, பொது ஸ்தாபனப் பிரதிநிதிகள் ஆகியோருடன் ஐக்கிய நாணய சங்கப் பிரதிநிதியும் இருப்பார்.

இது வரை நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டத்தின் கீழ் கொடுக்கப்பட்ட கடன்களைத் திருப்பிப் பெற முடியாத நிலை ஏற்பட்டதனால் தான் புதிய திட்டம் கொண்டு வரப்படுகிறது, (இ-எ)

ஸ்ரீலங்கா---

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

னங்களின் ஒத்துழைப்பு குறிப்பிடத்தக்க அளவில் இருந்திருக்கிறது.

எனினும் ஸ்ரீலங்கா தபால் தலை ஒட்டிய சில கடிதங்கள் பரிவர்த்தனையில் இருந்ததால் எமது கண்காணிப்புப் பிரிவு அவற்றைப் பறித்து பெரிய தபாற் கந்தோரின் முன் எரித்தது.

அதேவேளை ஆனையிறவு தடைமுகாமுக்கு அப்பாலும், தீவுப்பகுதிகளில் நயினாதீவு, அனலைதீவு, நெடுந்தீவு, எழுவைதீவு, மண்டைதீவு ஆகிய இடங்களுக்கும் ஈழம் தபால் தலைகளைத் தவிர்த்து ஸ்ரீலங்கா தபால் தலைகளை பாவிக்குமாறும் வேண்டுகின்றோம்.

தொடர்ந்தும் குடாநாட்டிற்குள் உள்ளூர் சேவைகளிற்கு மேற்குறிப்பிட்ட இடங்கள் தவிர்ந்த ஏனைய இடங்களுக்கு ஸ்ரீலங்கா முத்திரைகளின் பாவனை தடை செய்யப்பட்டுள்ளதால் பொது மக்களையும் நிறுவனங்களையும் ஈழம் தபால் தலைகளைப் பாவிக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

விஜே---

(1- ம்பக்கத்தொடர்ச்சி)

தில் பேசுகையில் தெரிவித்தார்.

சிறை பிடிக்கப்பட்ட இரண்டு சிப்பாய்களையும் விடுவிக்கும் திராணி இந்த அரசுக்கு இல்லை என்றும் திரு. அனுரா பண்டாரநாயக்கா சொன்னார்.

சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா பேசுகையில்,

மக்களைப் பாதுகாக்க இந்த அரசு தவறி விட்டது. இந்த நிலையில் ஒரு நிமிடம் கூட பதவியில் இருக்க ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு உரிமையில்லை என்று சொன்னார். (எ-ஐ)

போராளி---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைக் கூட்டணி அதனை ஏற்றுக்கொள்வதற்குத் தடையாக இருக்கமாட்டோம் என்று இடைத் தரகர் ஒருவர் மூலம் இந்திய அரசுக்கு அறிவித்துள்ளது.

கூட்டணி தனது நிலைப்பாட்டை இந்திய அரசுக்கு தெரியப்படுத்திவிட்டது. போராளிக் குழுக்களின் ஒத்துழைப்பு இல்லாமல் கூட்டணி செயல்படப்போவது இல்லை.

இதனால் போராளிகளின் ஒத்துழைப்பு இல்லாத நிலையில் மாகாண நிர்வாகத்தை கூட்டணி ஏற்று நடத்த வேண்டும் என்ற கருத்தை இந்திய அரசு நிராகரித்துவிட்டது.

இப்படி திரு. ரெட்டி 'இந்து' வில் எழுதியிருக்கிறார். (இ-ஐ-எ)

புலிகள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யினர் வந்து கொண்டிருந்த பொழுது எமது வீரர்கள் தரைக் கண்ணி வெடியினை வெடிக்கச் செய்தனர்.

அதன் விளைவாக முன்னே வந்துகொண்டிருந்த பொலீஸ் கவச வாகனம் கண்ணிவெடியில் சிக்குண்டு முற்றாகச் சிதைந்தது. அதில் வந்த நான்கு கொமாண்டோக்கள் தாக்குதல் நடந்த இடத்திலேயே பலியானதுடன் ஐந்துக்கும் மேற்பட்டவர்கள் பலத்த காயங்களுக்கு ஆளானார்கள். (அ-எ-21)

உயர்த--.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சென்று பெறுபேறுகளை நேரில் பெற்றுக் கொள்ளலாம் என்று யாழ்ப்பாணத்தில் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே வேளை தரம் ஐந்து (ஆண்டு ஆறு) புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளை கொழும்பில் இப்போது தங்கியிருக்கும் கல்விப் பகுதி நிர்வாக அதிகாரி திரு. க. சந்திரராசா இங்கு கொண்டு வருவார். அனேகமாக அந்த முடிவுகள் சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் வெளியிடப்படலாம் என்று தெரிகிறது. (இ-ஐ-எ)

தகவல் கொடுக்க..

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

ளித்தார்.

சிவக்கொழுந்து மகேந்திரன் என்பவரே இத்தண்டனைக்கு ஆளானார்.

மூதூர், தெஹிவத்தையைச் சேர்ந்த இவர், தீவிரவாதிகளுக்கு உணவுப் பொருள்களை மாட்டு வண்டியில் கொண்டு போய்க் கொடுத்தார்; அதுபற்றிய தகவலை அதிகாரிகளுக்கு அறிவிக்கத் தவறிவிட்டார். இப்படி அவர்மீது பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் குற்றஞ்சாட்டப்பட்டு இருந்தது.

குப்பிளான் கிளை இன்று திறக்கப்படும்

சுன்னாகம், அக், 29

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் குப்பிளான் கிளை புதிய கட்டடத்தை இன்று புதன்கிழமை உதவி அரச அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் திறந்து வைக்கிறார்.

மாலை 4,00 மணிக்கு சங்கத்தலைவர் திரு. சி. குமரவேல் தலைமையில் நடைபெறும் திறப்பு விழாவில் பலபுதிய நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. (இ.27)

மக்கள்..

(2-ம்பக்கத் தொடர்ச்சி)

தையும் அடக்குமுறை நடவடிக்கைகளையும் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

இத்தகைய பலம் பொருந்திய எதிரியை தமிழ் பேசும் மக்கள் எதிர்த்து நிற்பதற்கு பரந்த வெகுஜன எழுச்சியையும் பல்வேறு பட்ட போராட்டவடிவங்களையும் முன்னெடுக்க வேண்டும்.

இதற்கு மக்களின் ஐக்கியமும் அவர்களது எல்லையற்ற பங்களிப்புகளுமே அவசியம்.

அதற்கான கொள்கைகளும், நடைமுறைகளும் நிர்ப்பந்தமோ, திணிப்போ இன்றி முன்வைக்கப்பட்டால் நிச்சயம் மக்கள் பெரும் போராட்டச் சக்தியாக அணி திரண்டே தீருவார்கள் என்று கூறினார்.

கூட்டத்தில் திருவாளர்கள் சோ.தேவராஜா, க. தணிகாசலம், கா. கதிர்காமநாதன், த. தருமலிங்கம், என். இரவீந்திரன் ஆகியோரும் உரையாற்றினர் (இ)

கேள்விப்பத்திரம்
பழைய பத்திரிகைகள் விற்பனைக்கு உள்ளன. கேள்விப்பத்திரங்களை 10-11-86 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.
விளம்பர எண் — 37
மே/பா. உதயன்
த. பெ. எண்: 23,
யாழ்ப்பாணம்.

G C E (A./L.) 1987
Evening Classes
PHYSICS — VARNAM
3 - 11 - 86 புதிய பிரிவுகள் ஆரம்பம்
திங்கள், வெள்ளி 3 — 4 Electricity
திங்கள், வெள்ளி 4 — 5 Mechanics
NEW MASTER INSTITUTE
B. M. C. Lane, JAFFNA.

மாடுகளுக்கு

தொண்டை அடைப்பான் நோய்த் தடுப்பு ஊசி

கந்தரோடையில் இன்று ஏற்றப்படுகிறது

யாழ்ப்பாணம், அக். 29

தொண்டை அடைப்பான் நோய்த் தடுப்பு ஊசி மாடுகளுக்கு இன்று கந்தரோடையில் ஏற்றப்படுகிறது.

தெல்லிப்பளை கால் நடை வைத்தியரின் கீழ் வரும் 5 இடங்களில் இவை இலவசமாக ஏற்றப்படும்.

மாடு வளர்ப்போர் பின்வரும் நிலையங்களில் குறிப்பிட்ட நேரங்களில் தமது மாடுகளைக் கொண்டு வரும் படி கேட்கப்படுகின்றனர்.

1 குருவளை அரசடி காலை 9.00–10.00
2 கந்தரோடைவாசிகசாலை 10.00–11.00
3 கந்தரோடை தமிழ் கலவன் பாடசாலை 11.00–12.00
4 உடுவில் கிராம முன்னேற்றச் சங்கம் பிற்பகல் 1.00–2.00
5 கந்தரோடை ஆரம்ப சுகாதார நிலையம் 2.00–3.00

மாடுகளுக்கான தொண்டை அடைப்பான் நோய்பற்றி தெல்லிப்பளை கால் நடை வைத்தியர் டாக்டர் திருமதி சு. தனபாலசிங்கம் பின் வருமாறு கூறுகிறார்:–

கால் நடைகளில் முக்கியமாக மாடு, எருமைகளில் தொண்டை அடைப்பான் என்ற நோய் மழை தொடங்கும் போது ஏற்படுகிறது. பெரும் உயிர்ச்சேதத்தை இது கொண்டு வரக் கூடியது.

பாமர மக்கள் இதனை ''முன் அடைப்பன்'' என்று கூறுவர்

இந் நோய் மாடுகளில் ஏற்பட்டதும் அவையின் தாடை, காலிற்கிடையிலான பகுதிகள் வீங்குவதோடு, மாடுகள் உணவு உண்ணாது வீணீர் வடிக்கும். பின்னர் மாடுகள் நொண்ட ஆரம்பிக்கும். பின் இறந்து விடும்.

இந் நோய் ஏற்பட்ட பின் இதனைச் சிகிச்சை செய்து மாற்றமுடியாது.

நோய் மாடுகளில் ஏற்படாது தடுக்க நான்கு மாதங்களிற்கு மேற்பட்ட வயதுடைய கன்றுகளுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றவேண்டும்.

பின் இந்த ஊசியை வருடா வருடம் ஏற்றிக் கொள்ள வேண்டும்.

அண்மையில் கந்தரோடைக் கிராமத்தில் இந் நோய் இருப்பதாக அறியப்பட்டுள்ளது. இந் நோய் மேலும் பரவாது தடுக்க மாடு வளர்ப்போர் ஒத்துழைப்பு மிக அவசியம்.

இப் பகுதியிலிருந்து கால் நடைகளை வேறு கிராமங்களுக்குகொண்டு செல்வதையும் வேறு கிராமங்களிலிருந்து இக் கிராமத்தினுள்கால்நடைகளை எடுத்துச் செல்வதையும்முற்றாகநிறுத்துவது அவசியம்.

மாடுகளுக்கு நல்ல புல் அடர்வுத் தீன் என்பன கொடுத்து அவற்றை மிகவும் திடகாத்திரமாக வைத்திருக்க வேண்டும்.

இப்படி அவர் கூறினார். (இ)

இலங்கை---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

செய்தியாளர் மத்தியில் பேசுகையில் அவர் மேலும் சொன்னதாவது;

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து தமிழக அரசின் நிலை குழப்பமாகவே உள்ளது.

இலங்கை அரசு தமிழருடன் அதிகாரப்பகிர்வு செய்து கொள்ளத்தவறினால், இந்திய அரசு, தமிழருக்கு ஆதரவாக இராணுவ நடவடிக்கை எடுக்கத் தவறினால், ஓய்வுபெற்ற இராணுவ வீரர்களுடன் இலங்கைத் தமிழருக்கு உதவும் நடவடிக்கைகளை மேற்கொள்வேன்,

இப்படி டாக்டர் சுப்பிரமணிய சுவாமி சொன்னார். (ஐ-எ)

அமெரிக்கா ----

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றேகன் கையொப்பமிட்டார்.

தென் ஆபிரிக்காவிடம் இருந்து எஃகு, இரும்பு, சர்க்கரை முதலியனவற்றை அமெரிக்கா இறக்குமதி செய்யாது.

இப்படியான பொருளாதார தடையை தென் ஆபிரிக்கா மீது விதிக்கவேண்டும் என்று அமெரிக்க காங்கிரஸ் முன்னர் தீர்மானித்து இருந்தது.

இதை அமெரிக்க அதிபர் றேகன் நிறுத்தி வைத்து இருந்தார். (ஐ-எ)

சிப்பாய் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தின் பைகளில் போடப்பட்டு பெட்டிகளுக்குள் வைக்கப்பட்டு சீல் செய்யப் பட்டே தென் இலங்கைக்கு அனுப்பப் படுகின்றன.

பெட்டி திறந்து பார்க்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்த அரசு, பொலீஸ் அதிகாரி ஒருவரை இறந்தவரின் வீட்டுக்கு அனுப்புகின்றது.

அந்த பொலீஸ் அதிகாரி சவப் பெட்டி அருகே இருந்து, பெட்டி திறக்கப்படாமல் பார்த்துக் கொள்கிறார். [illegible] பின்னரே அந்த அதிகாரி திரும்புகிறார்.

இப்படி திரு. விஜய குமாரணதுங்க சொன்னார். (இ-எ-ஐ)

நிப்பொன்
* சர்வதேச தொலைத் தொடர்பு
சேவை: 24 மணி நேரம்
* பிரயாணச் சேவை. விமானச் சீட்டுக்கள்
CONFIRMATION, RE-CONFIRMATION
விசா, பாஸ்போட், பொண்ட்
* யாழ் - கொழும்பு
பஸ் சேவை: ரூபா 15/—
முன்கூட்டியே ஆசனங்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.
தொலைபேசிக் கட்டண விபரம் 3 நிமிடங்கள்
இந்தியா - 199/-
பிரான்ஸ் - 260/.
சிங்கப்பூர் . 260/-
ஜேர்மனி - 260/-
சவூதி அரேபியா - 260/-
மலேசியா - 260/-
நிப்பொன் ரெலி ரவல்ஸ்
2G. ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம். போன்: 23364 - 23866

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 29-10-1986.
Printed and Published by Uthayan Publications (Private) Ltd
15, Second Lane, Power House Road, JAFFNA.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Number QJ60N 86.